பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகம்
22 FEB 2024
சென்னை–600 006

010963

22/02/2024
இ3.

வாய்மையே வெல்லும்

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் – 18 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 306 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் மற்றும் 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 700 (350+50) ஆசிரியர் பணியிடங்கள் ஆகமொத்தம் 1132 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2024 முதல் 31.12.2028 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல்– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை.</u>

**அரசாணை (1டி) எண்.56** **நாள்.22.02.2024**

**திருவள்ளுவராண்டு 2055,**
**சோபகிருதுவருடம், மாசி–10**
**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை (நிலை) எண்.321 பள்ளிக் கல்வித் துறை நாள் 22.12.2010
2. அரசாணை (நிலை) எண்.185, பள்ளிக் கல்வித் துறை நாள், 17.9.2013
3. அரசாணை (நிலை) எண் 199 பள்ளிக் கல்வித் துறை நாள், 02.12.2014
4. அரசு கடிதம் எண். 9042/ப.க5(1)/2023/2 நாள். 28.07.2023
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.000520/எல்/இ3/2022, நாள்.10.01.2024

*************

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 18 மாதிரிப் பள்ளிகளுக்கு, ஒவ்வொரு பள்ளிக்கும் 17 ஆசிரியர் பணியிடங்கள்மற்றும் 7 ஆசிரியரல்லாத பணியிடங்கள் வீதம் முறையே 306 ஆசிரியர் பணியிடங்களும், 126 ஆசிரியரல்லாத பணியிடங்களும் என மொத்தம் 432 பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2013–14 ஆம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்படும் 50 உயர்நிலைப் பள்ளிகளுக்குதலா 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர்

பணியிடங்கள் தோற்றுவித்தும், தரம் உயர்த்தப்படும் 50 நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 50 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் போது நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப் பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுவதால், அப்பள்ளிகளுக்கு தலா ஒருதொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம்வீதம் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2014-15 ஆம் கல்வியாண்டில் 50 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 50 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை, அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக ரூ.9300-34800+4800 என்ற தர ஊதியத்தில் நிலை உயர்த்தியும், நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு தலா 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300-34800+4600 என்ற தர ஊதியத்தில் புதியதாக தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு தரம் உயர்த்தப்படும் 50 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப் பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுவதால், அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் (ரூ.9300-34800 + 4500 என்ற தர ஊதியத்தில்) தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசுக்கடிதத்தில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் - 18 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 306 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் மற்றும் 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 700 (350+50) ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 1132 தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2023 முதல் 31.12.2023 வரை அரசளவில் வழங்கப்பட்ட ஊதிய கொடுப்பாணையின்படி ஊதியம் பெற்று வழங்கப்பட்டது என்றும், தற்பொழுது இப்பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய கொடுப்பாணை முடிவடைந்த நிலையில், ஊதிய கொடுப்பாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, திட்ட ஏற்புக் குழு (Project Approval Board) நிதி உதவியினை குறைத்தால் அதற்கு தகுந்தாற்போல் பணியிடங்கள் குறைக்கப்

படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம் – 18 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 306 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் மற்றும் 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 700 (350+50) ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 1132 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2024 முதல் 31.12.2028 வரை ஐந்தாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை, இவ்வலுவலக மின் கோப்பு எண் 897/பக5(1)/2024 நாள் 19.02.2024 இல் நிதித்துறையிடம் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின்ஆணைப்படி//

ஜெ.குமரகுருபரன்,
அரசுச்செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர் , சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 01/08/35
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35

**நகல்**

நிதி(கல்வி–2)த்துறை சென்னை–9.
பள்ளிக் கல்வி(வரவு செலவு)த்துறை, சென்னை–9
இருப்புகோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படிஅனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

நகல்:-

இவ்வியக்குநரக ந.க.எண்: 000520/ எம்/இ3/2022 நாள்: 22.02.24

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர்.

பெறுநர்:-

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.